# தீபநெறி

எல்லாம் செயல் கூடும்

தீபம் 7 நெறி 6 | தமிழ் மாத இதழ் | விலை ₹1 | ஜனவரி 2017

பட்டினியில்லா...
நோயில்லா...
குற்றமில்லா...

வளமிக்க
வையகத்தை
வார்த்தெடுப்போம்!



தைப்பூச ஜோதி தரிசனம் - 9.2.2017

தைப்பூச திருநாள் வாழ்த்துக்கள்


எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க !
வள்ளல் மலரடி வாழ்க!! வாழ்க !!!

# வாயார வாழ்த்துகின்றோம்...





மனிதரில் புனிதர் - தன் வாழ்நாளில் 50 ஆண்டுகள் சேவைக்காக அர்பணித்துக் கொண்ட SMILE அமைப்பின் நிறுவனர், இரு விழி இழந்த தயவு திரு. சுந்தரம் அவர்களை தீபம் மனதார வாழ்த்துகிறது

## " தீபநெறி " ஆசிரியர் குழு



**கே.என். உமாபதி**
ஆசிரியர் - தீபநெறி இதழ்
கே.கே. நகர்
கைபேசி : 95518 49757




அன்பின் பிடியுள்
**அர. இலட்சுமணசாமி**
இராணிப்பேட்டை
தொலைபேசி :04172 273293
கைபேசி : 80564 38488



இலக்கியச்செல்வர்
**இளந்தேவன்**
அய்யப்பந்தாங்கல்
கைபேசி : 99400 92876



வள்ளலார் சிற்றடியேன்
**குருபக்கிரிசாமி**
ஆசிரியர் - அருட்சுடர்
வடலூர்
94428 12844



**மு. பாலகிருஷ்ணன்**
தணிக்கை & வெளியீட்டாளர்
தீபநெறி இதழ்
கைபேசி : 94440 73635

# வாருங்கள்

"பொதுவது சிறப்பது புதியது பழயது என்று
அது அது வாய்த் திகழ் அருட்பெருஞ்ஜோதி"

என அகவல் 185-186 ஆவது வரிகளில் வள்ளலார் எழுதுகிறார். அது என்னும் அருட்பெருஞ்ஜோதி எல்லா ஜீவராசிகட்கும் பொதுவானது என்பதை விண்ணப்பத்தின் கடைசி வரியில் எல்லாமாகிய அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே தேவரீர் திருவருட் பெருங் கருணைக்கு வந்தனம், வந்தனம் என்று சொல்லி, அவனே எல்லாமாகி இருக்கிறான். எனவே அவனுக்கு எல்லா உயிர்களின் சார்பாக ஒரு வந்தனத்தையும், தன்சார்பாக ஒரு வந்தனத்தையும் சொல்கிறார்.

அவன் படைப்பில் பெரிய பேறு பெற்றது மனிதப் பிறவி மட்டுமே! ஆறு அறிவுடன் அவன் வாழ வேண்டும். இது பொது.

எவனொருவன் மனதை அறிவில் ஒடுங்கச் செய்கிறானோ அவனுக்கு முத்தி என்பது முன்னுறு சாதனமாகவும், எவனொருவன் பொறிபுலன்களைக் கொண்ட ஜீவனை அறிவில் ஒடுக்குகிறானோ அவனது சித்தி என்பது நிலை சேர்ந்த அனுபவமாகவும் மேன்மை பெற வழி சொல்லப்பட்டிருக்கிறது. இது சிறப்பு.

இந்திரிய, கரண, ஜீவ, ஆன்ம ஒழுக்கத்துடன் தயவை சாதனமாகக் கொண்டு இறவாநிலை அடைய முடியும் எனச் சொல்லி வள்ளலார் செய்து காட்டியது புதியது.

ஏகன் ஒருவனே தேவன், அறஞ்செய விரும்பு, அற்றார் அழிபசி தீர்த்தல், ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும், செத்தே போனால் சிரியாரோ, சன்மார்க்கம் போன்ற வார்த்தைகள் பல காலங்களில், நூல்களில் எழுதப்பட்டிருக்கிறது என்பது பழயது.

ஆக பொது, சிறப்பு, புதியது, பழயதுவாகத் திகழ்பவனே அருட்பெருஞ்ஜோதி என்பது உண்மை! எனினும் இது வள்ளலார் வார்த்தை என்பதால் சிறு சுதந்திரம் கொடுக்கப்பட்டிருக்கும். நாம் இன்னும் கொஞ்சம் பொருள் காணலாமே!

**தருமச்சாலை :**

"பொது அது" என்பது இங்கு அகவினம், புறவினம், ஆணினம், பெண்ணினம், பாமரர், பாராள்பவர் (1947-49களில் சென்னை ராஜதானி முதலமைச்சர் ஓமந்தூர் இராமசாமி அய்யா மற்றும் அவர் காலத்தவர்) பலரும் மண்ணால் ஆன தருமச்சாலையின் தரையில் அமர்ந்துதான் பலநாள் சாப்பிட்டிருக்கின்றனர் என்பதை வரலாறு காட்டுகிறது அது பொது.

1867-ம் ஆண்டு வள்ளலாரால் ஏற்றப்பட்டு அணையா அடுப்பாகி பல லட்சம் பேர்களின் பசியை பகல் இரவு எனப் பாராது போக்கி வருகிறதே அது சிறப்பு. புதியது அறவோர், புலவர், துறவிகள் போன்றோர்கட்கு இல்லறத்தார் (சமுசாரிகள்) தான் சமைத்த உணவை உபசரித்து அளிப்பர் இது சிறப்பு. ஆனால் வெள்ளாடையணிந்த வள்ளலார் அடுப்பை மூட்டி சமைத்து இல்லறத்திலுள்ளவர்களை அழைத்து, அமர்த்தி உணவு பரிமாறி உபசரித்து பசிபோக்கியது புதியது.

துறவோர், தவத்தோர் அடுப்பு மூட்டி சமைத்துச் சாப்பிடுவதோ, பிறருக்குப் போடுவதோ கூடாது என்பது பழயது.

**சத்திய ஞானசபை:**

எந்த சாதியராயினும், மதத்தவராயினும், ஆணாயினும், பெண்ணாயினும் ஞானசபையில் ஜோதி தரிசனம் செய்யலாம். வருணம், ஆசிரமம், ஆசார, சங்கற்பத்திற்கு அப்பாற்பட்ட பொது அது.

கொலை புலை தவிர்த்தவர்கள் மட்டுமே ஞான சபை வளாகத்துக்குள் வரலாம், தன்னுடம்பை பெருக்க வைக்க கடவுளால் படைக்கப்பட்ட வேறு ஒரு உயிரைக் கொன்று அதன் மாமிசத்தை தின்று அதே கடவுளின் சந்நிதிக்கு வந்து அவனிடமே அருள் வேண்டுவது எவ்வகையிலும் நியாயமல்ல எனத் தடை செய்தாரே அது மிகச் சிறப்பு.

இறைவன் மறை பொருளல்ல. ஒளி வடிவினன். எல்லா வாசலையும் திறந்து அவனைத் தரிசிக்கலாம். சிறப்புத் தரிசனம் என்ற பெயரில் பணம் கொடுத்து இப்போதே திரை நீக்கி எனக்குத் தரிசனம் காட்டுங்கள் என்பதெல்லாம் இங்கு நடைமுறையில் இல்லை. அந்த நாளில் அந்த நேரத்தில் அத்தனை மணித்துளிகள் மட்டுமே திரை விலக்கப்படும். விலை கொடுத்து அதை (மாயையை) விலக்க முடியாது என்பது புதியது.

ஜோதியே, சுடரே, அரும்பெரும் ஜோதி, தீப மங்கள ஜோதி என்பதெல்லாம் பலப்பல சொல்லி அதில் ஒன்று தான் இது என்றும், ஒளிமட்டும் தான் வழிபாட்டுக்குரிய ஒரே கடவுள் எனச் சொல்லாதது பழயது.

**சித்தி வளாகம்**

மனமிரங்கி செய்யும் பசி தவிர்த்தலில் பரிணமித்த மனஅறிவு தருமச்சாலையில் பக்குவப்பட்டு, ஞான அறிவாகிட வழிசெய்து ஞானசபை தரிசனத்துக்குப் பின் அருளறிவாக மிளிர்ந்து ஒளிபெற "அருளறியார் தமையறியார் எம்மையும் பொருளறியார்" என்ற அகவல் வரியில் அறிவிக்கிறதே! அந்தச் சித்தவளாகத்தில் தெளிவு பெறும் நிலை அது பெருநிலை அது பொது.

வம்மின் உலகியலீர்–இறவா வரம் நீர் ஏன் பெற மாட்டீர் என அழைத்த வள்ளலார் அதை நிரூபித்த இடமே சித்தி வளாகம். சன்மார்க்கத்தினருக்கு என்று ஒரு கொடி ஏற்றி அதன் கீழ் நின்று பேருபதேசம் செய்தாரே அது மிகச் சிறப்பு.

இது வரை வாழ்ந்தோருக்குப் பிறந்த நாள், மறைந்த நாள் தெரியும். ஆனால் வாழ்ந்து கொண்டிருப்பவர்கட்குச் சிறந்த நாள் என்று ஒன்று வரலாம். வள்ளலார் "பெற்றேன் என்றும் இறவாமை" என்பதை நிரூபித்த அந்தச் சிறந்த நாள் பற்றிய உண்மையை அப்போதைய தென்னாற்காடு (கடலூர்) மாவட்ட கலெக்டர் ஜி.எச். கார்ஸ்ட்டின், ஐ.சி.எஸ். என்னும் ஆங்கிலேயர் மிக நேர்த்தியாக கெசட்டில் பதிவு செய்தது சாட்சி. இது மனித குலத்திற்கு புதியது.

இம்மை மறுமை அல்லது சொர்க்கம் நரகம் மட்டுமே சொல்லி வாழும் நம் சமயங்கள் பழயது.

வடலூர் பெருவெளியாய், அதில் தருமச்சாலையாய், சத்திய ஞான சபையாய், மேட்டுக்குப்பத்தில் கொடியாய், சித்தி வளாகத் திருமாளிகையாயும், எங்கெல்லாம் பசியிருக்கிறதோ, ஞானமிருக்கிறதோ, அருளிருக்கிறதோ அங்கு மட்டுமில்லாமல் ஐந்தொழில் செய்ய வல்லமை பெற்றவரை, நம்மை வாழ்விக்க வருவிக்கவுற்ற வள்ளலாரை வரும் 9.2.2017 அன்று வடலூருக்கு வந்து அவருக்கு நன்றி சொல்லி தைப்பூச ஜோதி தரிசனம் செய்ய வாருங்களேன்!

**கே.என். உமாபதி**
கைபேசி : 95518 49757

## கடவுள் ஆராதனை என்பது ஏழைகட்கு அன்னமிடுதலே!



நூற்றுக்கணக்கான பார்வையற்றவர்களுக்கு நித்ய தீப தருமச்சாலையில் அன்போடு அன்னமலித்தல்...



பார்வையற்ற 115 குடும்பங்களுக்கு 1.50 லட்சம் வாழ்வாதார உதவி தந்து பசிற்றுவித்தல் செய்யும் காட்சி

வாழிநீடூழி வாழியென்று ஓங்குபேர்
ஆழியை அளித்த அருட்பெருஞ்ஜோதி (230)

# அகப்பயணம்

வள்ளலார் சொல்கின்ற ஒன்றாகிய கடவுள், அகத்திலே அருளாகவும், புறத்திலே ஜோதியாகவும், ஒரு நாணயத்தின் இரு பக்கத்தைப் போன்று அருட்பெருஞ்ஜோதியாக அகம்புறம் என்று இல்லாமல் அவர் ஒருவரே அனகமாக வியாபித்து எங்குமாய் விளங்குவதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

நாம் மெய்ப்பொருளைக் காண வேண்டி பயணம் மேற்கொண்டு இருப்பதால் அந்த மெய்ப் பொருளாகிய கடவுள் விளங்கி நிற்கும் நிலைகளைப் பற்றித் தெரிந்து மேல் செல்ல வேண்டியவர்களாய் இருக்கின்றோம். எப்படி இருள் நிலை கடந்து மருள்நிலை பின்பு அருள்நிலை என்றும் உலக அனுபவம், உயிர் அனுபவம், அருள் அனுபவம் முடிவில் இறை அனுபவம் என்றும் கடவுள் ஞானத்தால் ஐந்து உணர்வுகளைக் கொண்ட ஜீவராசிகளில் ஞானம் புலன் உணர்வாகவும் மனிதனில் மன அறிவாகவும் நம்முடைய ஐயா போன்ற அருளாளர்களிடம் ஆன்ம ஞானமாக விளங்குவதைப் போன்று என்று அறிவதைப் போல் நாம் முதலில் உபாய ஞானம் பெற்றுக் கொண்டால் தான் கடவுளைக் காணும் உண்மை ஞானம் பெற்றுக் கொள்ள படி ஏற முடியும். அதன் பின்புதான் முடிவாகக் கடவுளை அடைந்து அவர் மயமாய் வாழக் கூடிய ஒருமை வாழ்வாகிய அனுபவ ஞானத்தைப் பெற்று பேரின்ப வாழ்வு அடைந்து கொள்ள முடியும்!

நமக்கு மெய்ப்பொருள் இருநிலை கொண்டு அகத்தில் அதாவது ஒவ்வொருவருடைய சிரநடு சிற்றம்பலத்திலே பகர வடிவ ஞானப் பீடத்திலே அருள் ஒளியாகவும் புறத்திலே ஜோதியாக அதாவது தேகாதி பிரபஞ்சமாகவும் விளங்கி நின்றாள்கின்றார்! இப்படி விளங்கி நிற்கும் ஆண்டவரை 96 தத்துவங்களைப் பெற்றுக் கொண்ட தத்துவப் பூர்த்தியாகிய மனித உரு பெற்றக் கொண்ட மனிதன் அவனுடைய அகத்திலே ஆன்மாகாசத்தில் விளங்கும் கடவுளை அருள் ஒளியாகத்தான் காணமுடியும் என்பதையும் புறத்திலே எங்குமே அருள் ஆண்டவரை நேருக்கு நேராகக் காண முடியாது என்பதையும் ஐயா அவர்கள் மிக வலியுறுத்தி திருவருட்பாவில்,

தவறாத வேதாந்தம் சித்தாந்த முதலாச்
சாற்றுகின்ற அந்தமெல்லாம் தனித்துரைக்குப் பொருளை
இவறாத சுத்த சிவ சன்மார்க்க நிலையில்
இருந்து அருளாம் பெருஞ்ஜோதி கொண்டறிதல் கூடும்
அராலும் பிறிதொன்றால் கண்டறிதல் கூடாது
என்னாணை என் மகனே அருட்பெருஞ் ஜோதியைத்தான்
தவறாது பெற்றனை நீ வாழ்க என்ற பதியே!
சபை யினடத் தரசே யென் சாற்று மணிந்தருளே

என்ற பாடலிலும், ஞான சரியையில் கடைசி பாடலிலே அருள் ஆண்டவரை புறத்தே நேருக்கு நேராகக் காண முடியாது என்பதனை,

சார் உலக வாதனையைத் தவித்தவர் உள்ளகத்தே
சத்தியமாய் அமர்ந்தருளும் உத்தம சற்குருவை
நேர் உறவே எவராலும் கண்டு கொளற்கரிதாம்
நித்தியவான் பொருளை

என்ற பாடல் மூலமாகவும் உறுதி செய்வதை அன்பர்கள் கொஞ்சம் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும்.

ஆக, நாம் கடவுளைக் காண மேற்கொண்டுள்ள பயணத்தில் புறப்பயணம் அதாவது பழனிக்கு பாத யாத்திரை, திருச்செந்தூருக்குச் சஷ்டி விரதம், ஐயப்பசாமிக்கு இருமுடி என்ற புறப் பயணத்தால் ஆண்டவனைக் காண முடியாது என்று அறிவதுடன் அகப் பயணத்தால் தான் நாம் ஆண்டவரைக் காண முடியும் என்பதும் அறியலாகின்றது!

சின்னாளப்பட்டி Dr. V.B. **சண்முகம்**, MBBS DAC
9042933181

## வடலூர் தைப்பூச ஜோதி தரிசம்

தைப்பூச ஜோதி தரிசனத்தை முன்னிட்டு அன்பர்களின் வசதிக்காக பேருந்து ஏற்பாடு செய்துள்ளோம். ஜோதி காண குடும்பத்துடன் வாருங்கள்.

| | | |
|---|---|---|
| பயண நாள் | : | **9.2.2017** (வியாழக் கிழமை) |
| புறப்படும் நேரம் | : | **காலை 10 மணி** |
| புறப்படும் இடம் | : | **நித்ய தீப தருமச்சாலை**, வேளச்சேரி. |
| பஸ் கட்டணம் | : | ரூ. 500 (உணவு உட்பட) |

**பாவ மூட்டைகளை மட்டுமே பார்த்த மனித குலம் அதை தொலைக்கும்**
**அன்னதான காய்கறி மூட்டைகளையும் பார்க்கட்டுமே!**







**தொண்டுறாதவர் கைச்சோறும் வேண்டேன்**
**என்ற வள்ளலாரின் வாரிசுகள்**

நீடுகநீயே நீள்உலகு அனைத்தும் நின்று
ஆடுக என்ற என் அருட்பெருஞ்ஜோதி (236)

# அருட்பெருஞ்சோதி அகவல்

அனுபவப் பொருள் விளக்கம்

**திண்டுக்கல் சுவாமி சரவணானந்தா**

19. ஐயமும் திரிபும் அறுத்தென துடம்பினுள்
20. ஐயமும் நீக்கிய அருட்பெருஞ் ஜோதி

(உ-வி.) நாம் போற்றிக் கொள்ளுகின்ற நமது அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர், நமக்கு உயிரிலும், உடலிலும் உண்டாகின்ற குறைபாடுகளை எல்லாம் தீர்த்து அருள் பாலிக்கின்றவராவார். உயிரின் குறைபாடு யாதெனில், அபக்குவ காலத்தே ஏற்படுகின்ற அறியாமையாம். இவ்வறியாமையினால் உண்மை விளங்காது. ஒன்றை மாறுபாடாகக் கருதிக் கொண்டு இடர்ப்பட நேருகின்றதாம். இவையே முதலடியில் ஐயமும் திரிபுமாகக் குறிக்கப்பட்டன. ஐயம் என்றால் சந்தேகம், தெளிவின்மை, மருள் உணர்வுமாம். திரிபு என்றால் மாறுபாடு, தெளிவின்மை, மருள் உணர்வுமாம். திரிபு என்றால் மாறுபாடு, தெளிவின்மையால் ஒன்றைப் பிறிதொன்றாகக் கொள்ளல். வேறுபாடாகக் காண்டலை திரிசியக் காட்சி என்பர். இவை எல்லாம் ஆன்மாவாகிய உயிரின்கண் அருள் அறிவு ஏற்படாதபோது உள்ள மலபாச மறைப்பு நிலையாம்; இதுவே, ஆணவம், மாயை, கன்மமாக மொழியப்படும். அருள் ஞானமே ஆணவமாதி மலபாச ஆணிவேரை அறுத்துவிடுகின்றதாம். அவ்வருள் ஞானத்தால் உண்மைக்காட்சி உள்ளபடி விளங்கும் தருணம், ஐயத்திற்கும், திரிபிற்கும் இடமில்லையாம்.

இனி, இரண்டாம் அடியில் குறிக்கப்படும் ஐயம், உடலினுள் தோன்றும் கபம் அல்லது கோழை ஆகும். இக்கப தோஷத்தால் இரத்தம் முதலிய ஜீவதாதுக்கள் கெட்டு, உயிர்ப்பு ஆற்றல் தடைபட்டு மரணத்தையே வருவித்து விடும். நம் சுத்த சன்மார்க்க பதி நம் அசுத்த மாயா தேகத்தையே சுத்த நித்திய உடம்பாக ஆக்கி வாழ்விக்க எழுந்தருளுகின்றார். ஆதலால் இவ்வுடலில் கபம் சேர்ந்து தொல்லை செய்யா வண்ணம், தன் அருளொளி அமுதால் அக்கபத்தை யொழித்து விடுகின்றார். இவ்வனுபவ சாத்திய முறவே, சன்மார்க்க சாதகர் கரிசலாங்கண்ணியைத் தினமும் உட்கொள்ளல் வேண்டுமென்பது நம் வள்ளல் ஆணை.

“காறிக் கரிசாலையிலேயிடு கபமாறும்,” என்பது ஆன்றோர் அனுபவ வாசகம். ஆகவே, உயிரினிடத்தே மெய்யருள் ஒளியைக் காட்டி, அதனை உணர்விலும், உடலிலும் நிரப்பி ஐயமெலாம் போக்கிச் சுத்தப் பிரணவ ஞானதேக சித்தியோடு வாழ வைக்கும் நம் அருட்பெருஞ்ஜோதியைப் போற்றுவோமாக.

சென்ற மாத தொடர்ச்சி...

# ஒரு நேர்காணல் இறைவனிடம்!!

படிப்படியாக உயர்ந்து பரப்பிரம்மமாக மிளிர்வாய் என்று எண்ணித்தான் உன்னைப் படைத்தேன். உனக்கு அன்பு-அறிவு-ஆற்றல்-துணிவு அனைத்தையும் அபரிமிதமாக வழங்கினேன்.

அதி உன்னதமான "எண்ணும் ஆற்றல்", சொற்ப அளவில் தான் உன்னால் உபயோகப்படுத்தப்படுகிறது எனும் உண்மையை அறிவாயா?

உன் உடம்பை ஒரு முறை, உடம்பின் இயக்கத்தை-அவயவங்களின் செயல்திறனை முழுமையாக அறிந்து கொள்ள முயற்சித்ததுண்டா? உன்னுள்ளே நான் உறைவதை அறிவாயா? உணர்ந்ததுண்டா? "உடம்புளே உறுபொருள் கண்டேன்" எனப் போதித்தாரே திருமூலர், புரிந்து கொள்ள முயற்சித்தாயா?

"எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா" என்று ஒரு மாமனிதன் பாடினானே-நினைவிருக்கிறதா? ஒரே ஒரு இயற்கை இன்பத்தை நீ நுகர்ந்ததுண்டா? நுகர்வதுண்டா? நீ படைத்திட்ட செயற்கை இன்பங்களை, சிற்றின்பங்களை நாடித்தானே ஓடிக் கொண்டிருக்கிறாய். நோய்களின் நிலைக்களனாக மாறி வருகிறாயே! மருந்துகளையே உணவாகக் கொள்ளும் உனது இன்றைய நிலைக்கு நானா காரணம்? புதிது புதிதாக நோய்க் கிருமிகளைப் படைப்பது நீயா? நானா?? புறத்தூய்மையின் அவசியம் பற்றி போதிக்க வேண்டிய நிலைக்குத் தாழ்ந்துவிட்டாயே! உன்னைப் படைத்த பிறகு, நான் படைப்புத் தொழிலையே விட்டுவிட்டேனே! நீ அறிய மாட்டாய்! படைப்புத் தொழிலில் நீ விற்பன்னன்.

பல நூறு ஆண்டுகட்கு முன்பு இருந்த உனது முன்னோர், பல கடவுள்களையே படைத்தனர், பல வழிபாட்டு முறைகளையும் படைத்தனர். பல சமயங்களை-பல சம்பிரதாயங்களைப் படைத்தனர். எனது தத்துவம் உயர்ந்தது. எனது கோட்பாடு சிறந்தது. எனது கடவுள்தான் பரம்பொருள் என்றெல்லாம் வாதப் போர் நிகழ்த்தியதோடு விடாமல், வாட் போராகவும் மாற்றினர் உனது மூதாதையர். வன்முறைகள் அன்றே வெடித்தன. இன்றுவரை தொடர்கின்ற வன்முறைகட்கு காரணம் நானா? நீயா??

ஐயாயிரம் ஆண்டுகளில் பெருகிட வேண்டிய மக்கள் தொகையை ஒரு நூற்றாண்டிலேயே பெருக்கி விட்ட சாதனை படைப்பாளி அல்லவா நீ?

"உள்ளங்கையில் உலகம்" என்று உவகை கொள்கிறாயே உள்ளங்களை

இணைத்திட கற்றாயில்லையே! பரஸ்பர பரிமாற்ற பக்குவம்-மதக் கோட்பாடுகளாகட்டும், பொருளாதார பகிர்வாகட்டும், நிலவள-நீர்வள செழிப்பாகட்டும், மனிதாபிமானம் உன்னிடம் முற்றிலுமாக மறையத் தொடங்கிவிட்டதே! நானா காரணம்? பொதுமறை எனப் போற்றிப் பாடுகிறாயே! இருநூறு மொழிகளில் மொழிபெயர்த்துவிட்டேன் எனப் பெருமிதம் கொள்கிறாயே!

பெருமைக்கும் ஏனைச்சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்” படித்திருக்கிறாயல்லவா?

நாள் என்செயும்–கோள்தான் என் செயும் எனக் கேட்ட திருநாவுக்கரசரைப் போற்றுகிறாயே! அவர் கருத்தை ஏற்றிடும் தெளிவு இல்லையே ஏன்? ஏவுகணைகளை அனுப்பி கோள்களை ஆய்வு செய்யும் திறன் பெற்றுவிட்ட நீ, கோள்கள் உனக்குத் தருவதாகச் சொல்லப்படும் இடர்ப்பாடுகளைக் களைந்திட ஆய்வு மேற்கொள்ளாதது ஏன்? உனது எதிர்காலத்தை நிர்ணயிக்கும் திறன் உனக்கு அளிக்கப்பட்டுள்ளதே, அதை உபயோகப்படுத்தாமல், எதிர்காலம் பற்றி, அறிந்திட துடிப்பது ஏன்?

வருங்காலம் உரைத்திடும், காலவணிகர் கூற்றினை அரைகுறையாகப் புரிந்து கொண்டு துயரத்தில் மூழ்குவது ஏன்? நட்ட கல்லும் பேசுமோ? நாதன் உள்ளிருக்கையில்” உன்னுள்ளே நான் இருக்கிறேன்-உன்னோடு நான் இருக்கிறேன் என்ற உணர்வோடு தான் செயலாற்றுகிறாயா? இல்லையே!

இலவசத்தை ஏற்க பழகிவிட்ட உனக்கு, உடனடித் தீர்வு வழங்கிடத்தான் நான் இருக்கிறேன் என்ற தவறான மனப்பாங்கு, மூடநம்பிக்கை என்று மாறும்? என்னை அலங்கரித்து அழகு பார்க்கிறாய், அபிஷேகம் எனும் பெயரால் பால் குடங்களை ஆயிரக்கணக்கில் என் மீது கொட்டுகிறாய். “நடமாடும் நம்பர்க்கொன்று ஈயின் படமாடும் பரமனுக்கு ஆங்கு ஆமே,” இவையெல்லாம் சொல்லப்பட்டது உனக்காகத்தானே! ஆனால் நீயோ, அரிச்சுவடி பாடத்திலிருந்து ஓர் அடி கூட முன்னேற மறுக்கிறாய்.

ஆலயங்களை வணிக வளாகங்களாக மாற்றிவிட்டது நீயா? நானா??

இரந்துண்ணும் கொடுமையைக் களைய வேண்டியவன் நீயா?நானா??

உனது வாழ்க்கையை நிர்ணயிப்பதோ-வழி நடத்துவதோ உனது பழவினைகளா? அல்லது உனது மனப்பாங்கும், முயற்சிகளுமா?

ஆய்வுத்திறன் எனும் அறிவைக் கூடுதலாகப் பெற்றிருக்கிறாயே, அதனை முழுமையாகப் பயன்படுத்துவதே இல்லையே, ஏன்?

ஆக்குஞ்சக்தி அனைத்தையும் வழங்கியும் நீ அழிவுப்பாதையை நோக்கியல்லவா விரைகிறாய். வம்மின் உலகீர்–வறியோரை வாழ்விப்போம்” என்று ஆன்மநேயம் பற்றி அறைகூவல் விடுத்தாரே அவர் பின்னால் அணிவகுத்தீரா??

அண்மையில் ஒரு நாள் உன்னைப் போன்ற ஒரு மூடபக்தன் கோபக்கனலாக என் முன் வந்தவன், “ உன்னை முழுமையாக நம்பினேனே கைவிட்டு விட்டாயே” எனக் கதறினான். உனது குறை யாது?” என வினவினேன். வெள்ளத்தால் மூழ்கடித்துவிட்டாயே? கடைசி வரை உனது நாமத்தையல்லவா ஜபித்துக் கொண்டிருந்தேன் என்றான். வெள்ளம் வரப்போகிறது என்று அறிவிப்பு இருந்ததா?

ஆமாம். தண்டோரா போட்டு அறிவித்தார்கள். நீ இருக்க ஏன் அச்சம் என்று உனது நாமஜபம் ஆரம்பித்தேன்.

வெள்ளம் வந்தபின், படகில் வந்து உன்னைக் காப்பாற்ற முயற்சி செய்தார்கள் அல்லவா?

ஆமாம். நான் வர மறுத்துவிட்டேன். வீட்டின் கூரை மீது ஏறி நின்று உன்னைக் கூப்பிட்டேன்.

விமானத்தினின்று ஒருவன் கீழிறங்கி உன்னைத் தூக்கிக் காப்பாற்ற முயற்சி செய்தானே?

ஆமாம். நான் தான் அவன் கைகளில் சிக்காமல் உனது நாமம் ஜபித்தபடி நின்றேன். வெள்ளத்தில் மூழ்கினேன். நீ காப்பாற்ற வரவில்லையே ஏன்?

மூடனே, நடப்பவை அனைத்தும் என் செயல் எனும் நம்பிக்கை உள்ளவன் தானே நீ? தண்டோரா போட்டு அறிவித்தவனும்–படகில் வந்து அழைத்தவனும். ஹெலிகாப்டரிலிருந்து இறங்கி உன்னைத் தூக்க வந்தவனும் நான்தான் எனும் நம்பிக்கை உனக்கு வரவில்லையே? ஏன்? அவர்களில் என்னை நீ காணமுடியவில்லை என்றால் நீ இலட்சார்ச்சனை செய்தாலும் பயனில்லை. கோடி முறை ஜபித்தாலும் பயன் விளையாது. இனி, என்னிடம் கொடுக்கவும் ஒன்றுமில்லை. இனி ஏதும் சொல்வதானாலும் பயனில்லை. “அடுத்தவனிடம் அன்பு செலுத்துக் கடைத்தேற வாய்ப்பு கிட்டலாம்” குரலின் ஒலி தேய்ந்தது. ஒளிவட்டம் மறைந்தது.

விழித்துப் பார்க்கிறேன். தொலைக்காட்சிப்பெட்டியில் கலவரக் காட்சிகள். ஒரு சிறுமி, தன் தந்தையைக் காணாமல் கதறும் காட்சி. என் நெஞ்சை பிளந்தது.

**இலட்சுமணசாமி**
இராணிப்பேட்டை /8056438488

**யோகசித்திகள் வகை உறுபல கோடியம்**
**ஆக என்று எனக்கருள் அருட்பெருஞ்ஜோதி (244)**

**சென்ற இதழில் மார்கழி விடியல் என்ற தலைப்பில் வெளிவந்த கட்டுரையால் கிடைக்கப்பெற்ற 350 போர்வைகளை மார்கழி குளிரில் பல பகுதிகளில் இரவில் விநியோகம் செய்ததில் ஒரு சில காட்சிகள்.**














**350 போர்வைகளுக்கு நிதியாகவும், பொருளாகவும் அள்ளித்தந்த வள்ளல்கள்**

| S.No | Name | Place | Amount |
|---|---|---|---|
| 1 | Mr.Sugavanam | Velachery | 52 Bed sheets |
| 2 | Mr.Suresh Kumar | Orchid | 50 Bed sheets |
| 3 | Mr.Uttam Chand Jain | Velachery | 50 Bed sheets |
| 4 | Mr.Mariyappan K | Chennai | 5 Bed sheets |
| 5 | Ms.Karthiyayini | Chennai | 40 Bed sheets |
| 6 | Mr.Karunai Raj | Orchid | 3 Bed sheets |
| 7 | Mr.Vinod Amarchand Sharma | Velachery | 11 Bed sheets |
| 8 | Mr.Prabhakaran C | Madambakkam | 10 Bed sheets |
| 9 | Prof. K. Muthukumar | St. Joseph College | Rs. 10000 |
| 10 | Mr.Vijay | Poland | Rs. 10000 |
| 11 | Mr.Deepak Krishnan | Madipakkam | Rs. 5000 |
| 12 | Mr.Balaji M D | Ambattur | Rs. 2000 |
| 13 | Mr.Sridhar | Madurai | Rs. 1001 |
| 14 | Ms.Indirani Ramachandran | Velachery | Rs. 1000 |
| 15 | Ms.Mullai Shanthi | Velachery | Rs. 1000 |
| 16 | Ms.Sudha | Velachery | Rs. 1000 |
| 17 | Ms.Kasthuri | Velachery | Rs. 1000 |
| 18 | Mrs.Valarmathi | Velachery | Rs. 1000 |
| 19 | Thiru Arutprakasa Vallalar | Vadalur | Rs. 1000 |
| 20 | Mr.Praveen Kumar R | Chennai | Rs. 500 |
| 21 | Mr.Kannan | Puduchery | Rs. 200 |

# தீபநெறி

தீபநெறி இதழ் குறித்த தங்களின் கருத்துக்களை மேலான ஆலோசனைகளை, கடிதம் மூலமாகவோ, கட்டுரை ஆசிரியர்களுக்கு தொலைபேசி மூலமாகவோ தெரிவிக்கலாம்.

**No Subscription | No Membership Fee | NoEntry Fee**

## தீபநெறி மாதஇதழ்

தங்களின் நலம் விரும்பிகளுக்கு அனுப்ப / பெற
முகவரி மாற்றம் தெரிவிக்க

**9444073635** என்ற எண்ணுக்கு **முகவரியை** SMS செய்யவும்

# 115 பார்வையற்ற குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி

**இரயிலில் பொருட்கள் விற்கும் 115 பார்வையற்ற குடும்பங்களுக்கு ரூ. 1,50,000 லட்சத்திற்கு வாழ்வாதார உதவியாக பொருட்களும், போர்வைகளும் தரும் காட்சி.**

**நிகழ்ச்சி ஏற்பாடு : மனிதரில் புனிதர் திரு. சுந்தரம் அவர்கள், SMILE அமைப்பு**

**தலைமை : திரு. சிவராமன் அவர்கள். நாள் : 31.12.2016**













**முத்தி என்பது நிலைமுன் உறுசாதனம்**
**அத்தகவு என்றஎன் அருட்பெருஞ்ஜோதி (250)**



**பார்வையற்ற குடும்பங்களின் வாழ்வாதார உதவி தந்து அவர்கள் வாழ்வில் விளகேற்றிய அருளாளர்கள்...**

| S.No | Name | Place | S.No | Name | Place |
|---|---|---|---|---|---|
| 1 | Mr.Balaji | Adyar | 22 | Mr.Sivakumar | Hope Trust |
| 2 | Mr.Ponnambalam | Anna Nagar | 23 | Mr.Surendranath | Hope Trust |
| 3 | Mr.Nanda Kumar | Ayanambakkam | 24 | Mr.Venkatesan | Hope Trust |
| 4 | Mr.Nataraj | Bahrain | 25 | Ms.Vinitha | Hope Trust |
| 5 | Mr.Sreeram Chellappa | Besant Nagar | 26 | Mr. B. Praveen Kumar | IIT Madras |
| 6 | Mr.Athithya | Chennai | 27 | Mr.Srinivasan | Kavankarai |
| 7 | Mr.Kiran Dasaka | Chennai | 28 | Mr.Venkatesan | IOC |
| 8 | Mr.Kumar | Chennai | 29 | Mr.Sivabalan | Medavakkam |
| 9 | Ms.Hema | Chennai | 30 | Ms.Ahila Devi | Medavakkam |
| 10 | Ms.Lakshmi Narayana | Chennai | 31 | Mr.Palanisamy | Muthukulathur |
| 11 | Ms.Osia | Chennai | 32 | Mr.Vedachalam | TAFE |
| 12 | Ms.Sujatha | Chennai | 33 | Mr.Narayanamoorthy | Pallikaranai |
| 13 | M/s.Hope Trust | Hope Trust | 34 | Mr.Murali K M | Porur |
| 14 | Mr.Arivazhakan | Hope Trust | 35 | Mr.Kumaraguru | Ramapuram |
| 15 | Mr.Balaji Subramani | Hope Trust | 36 | Mr.Anandh | Salem |
| 16 | Mr.Baskar | Hope Trust | 37 | Mr.Pandian | Selaiyur |
| 17 | Mr.Bhaskara | Hope Trust | 38 | Prof.Muthukumaran | Sembakkam |
| 18 | Mr.Gurunathan | Hope Trust | 39 | Ms.Hemalatha | SJC |
| 19 | Mr.Jayanthan | Hope Trust | 40 | Mr.Pandian | IOC |
| 20 | Mr.Ram Kumar | Hope Trust | 41 | Mr.Subbaiah | Velachery |
| 21 | Mr.Ranjith Kumar | Hope Trust | | | |

# நித்ய தீப தருமச்சாலை

**கடந்த 8 - ஆண்டுகளாக, தினசரி நூற்றுக்கணக்கான பசியால் வாடும் வறியவர்களுக்கு, 6 தருமச்சாலைகள் மூலம்**

# அன்னம் பாலிப்பு




**அன்னதான அறப்பணிக்கு அருட்கொடை தந்து நீங்களும் அருளின்பம் பெற வாருங்கள்!**
**தங்கள் சக்திக்கேற்ப, விருப்பத்திற்கேற்ப அன்னம் தந்து மகிழலாம்!**

## “தர்மம்” செய்ய எண்ணமுள்ளவர்கள்

தாங்கள், தங்கள் குடும்ப உறுப்பினர்களின் பிறந்த நாள், திருமண நாள் மற்றும் விஷேச நாட்களில் ஏழை, எளியோருக்கு அன்னம் தந்து மகிழ்ந்து ஆன்ம லாபம் பெற அன்புடன் அழைக்கின்றோம்.

**மேலும் விவரங்களுக்கு பிப்ரவரி - மார்ச் முன்பதிவிற்கு தொடர்பு கொள்ளவும்:**

# 94440 73635 / 2244 2515

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

Donations may be sent by crossed cheque to :

## Deepam Trust

No. 30, Drowpathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042.

**For Bank Transfer**

**State Bank of India, IIT Branch**
**A/c. No. 30265475129 / IFS Code SBIN0001055**

ஏகசிற் சித்தியே இயல்உற அனேகம்
ஆகியது என்ற என் அருட்பெருஞ்ஜோதி (254)
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

ஆதரவற்ற, பார்வையற்ற அயனாவரம் செல்வம் குடும்பத்திற்கு
அரிசி உதவி – 5 ஆண்டுகளாக...







நன்கொடைகளை நாங்கள் தருகிறோம், கேளுங்கள் இன்னும்
கேளுங்கள் என்று மாதவம் செய்து மங்கையாய் பிறந்தவர்கள் இதோ!

## மருத்துவ உதவி - 4 ஆண்டுகளாக...



தீபம் அறக்கட்டளைக்கு சமுதாயப் பணியே உயிர்மூச்சு






எட்டு இரண்டு என்பன இயலும் முற்படியென
அட்டநின்று அருளிய அருட்பெருஞ்ஜோதி (258)

## சென்னை வேளச்சேரி
## தீபம் அறக்கட்டளையின் அன்ன தருமச்சாலைகள்

- ★ வேளச்சேரி நித்ய தீப தருமச்சாலை.
- ★ வேளச்சேரி நடமாடும் அன்ன தருமச்சாலை.
- ★ சோழிங்கநல்லூர் தருமச்சாலை.
- ★ திண்டிவனம் கொஞ்ஜிமங்கலம் தருமச்சாலை.
- ★ சென்னை கல்குட்டை தருமச்சாலை.
- ★ செய்யாறு, இருங்கூர் தருமச்சாலை.
- ★ மேலும் 4 தருமச்சாலைகள்.

அன்னதான அறப்பணிகளுக்கு அரிசி, பருப்பு, எண்ணெய், மளிகைப் பொருட்கள், காய்கறிகள், கேஸ்சிலிண்டர், நன்கொடை தந்து அருளின்பம் பெற விரும்புவோர், தொடர்புகொள்க:

**தீபம் அறக்கட்டளை**
**94440 73635 / 2244 2515**

### சென்னை வேளச்சேரி
## நித்ய தீப தருமச்சாலை

தினசரி நூற்றுக்கணக்கானவர்களின் பசியைப் போக்கக் கூடிய அன்ன தருமச்சாலைக்கு வருகை தந்து, ஜோதி தரிசனம் செய்து, அருளின்பம் பெற தங்களையும், தங்கள் குடும்பத்தையும் அன்புடன் அழைக்கிறோம்!

**தீபம் அறக்கட்டளை**
7/8, புத்தேரிக்கரை தெரு, தண்டீஸ்வரம் கோவில் அருகில்,
வேளச்சேரி, சென்னை - 600 042

# தழைக்கும் சன்மார்க்கம்

"தேட்டிலே மிகு சென்னையிலிருந்தால் சிலுகுறும் என்று உளம் பயந்தே, நாட்டிலே சிறிய ஊர்ப்புறங்களிலே நண்ணினேன், காட்டிலே பருக்கைக் கல்லிலே புன்செய்க் களத்திலே திரிந்து உற்ற இளைப்பை ஏட்டில் எழுத முடியுமோ..." (பிள்ளைப் பெரு விண்ணப்பம் 54).

பொருள் தேடுவதில் பொழுது முழுதும் கழிக்கும் சில சென்னை நகரத்தவர் நடுவே நான் இத்தனைக் காலம் இருந்தேன். இது துன்பமாயும், ஆன்மிகத்துக்கு தடையாயுமிருப்பதால் நான் பயந்து கிராமப்புறத்தை நோக்கி, காடு, மேடு, பருக்கைக்கல், புன்செய் பூமி நிலங்களில் திரிந்து இளைப்படைகிறேன். இதை ஏட்டில் எழுத முடியுமா என எண்ணிக் கொண்டே இராமலிங்கப் பெருமானார் 1858ல் சென்னை வாழ்வை நீத்து சிதம்பரம் நோக்கி சில நண்பர்களுடன் நடந்து சென்றார். அவ்வழியில் மதுராந்தகம் என்னும் ஊருக்கு சற்று முன்பாக தேசிய நெடுஞ்சாலை-45ல் அமைந்துள்ள கருங்குழி என்னும் ஊர் வந்தார். சாலையின் மேற்கின் இருந்த மரநிழலில் சிறிது நேரம் அமர்ந்து இளைப்பாறிய பின் பயணத்தைத் தொடர்ந்தார் என இவ்வூர் மக்கள் செவி வழிச் செய்தியாக தெரிவிக்கின்றனர். அங்கு 1940ல் ஒரு சன்மார்க்க சங்கம் தயவு V. முருகேசன் அய்யா என்பவரால் தொடங்கப் பெற்று 1944-50களில் தயவு கன்னியப்பன் அய்யாவுடன் சிலரும் சேர்ந்து சங்கத்தை வளர்த்தனர்.

எண் 12, தேசிய நெடுஞ்சாலை 45ல், 20 சென்ட் நிலத்தில் அது இன்று குளிர்சாதன வசதியுடன் கூடிய அழகிய தியான மண்டபம் மற்றும் ஞான சபை, தருமச்சாலை, வாசக சாலை, தங்குமிடம் போன்ற வசதியுடன் நன்கு பணியாற்றுகிறது. தினமும் 50 பேருக்கு பசியாற்றுவதுடன் மருத்துவ முகாம், தடுப்பூசி முகாம், தையல், **Spoken English**, கணினி, யோகா, குழந்தை வளர்ப்பு பயிற்சிகளை மிக சிறப்பாக நடத்துகிறது, வாரந்தோறும் சன்மார்க்க சொற்பொழிவுகள், சத்விசாரங்கள், நூறு பேர் பங்கேற்கும் விதத்தில் நடக்கிறது. பேரிடர் காலங்களில் பல நூறு பேர்கட்கு இடவசதி, உணவு போன்றவற்றையும் செய்து வருகிறது. 75 ஆண்டுகளை நிறைவு செய்த இச் சங்கத்தை தொடர்பு கொள்ள:

**தயவு. S. குமார்**, 9443638759
12, தேசிய நெடுஞ்சாலை-45, பள்ளப்பேட்டை, கருங்குழி,
மதுராந்தகம் வட்டம், காஞ்சி மாவட்டம் -603303.

ஏழைகளின் போர்வைகளுக்கு பல்லாயிரங்களை அள்ளித்தந்த வள்ளல்
பேராசிரியர் பழனியப்பன் அவர்களுடன் பேராசிரியர் K. முத்துக்குமார் அவர்கள்.



ரோடோரம் நடைபாதையில் குளிரில் நடுங்கும் ஆதரவற்ற முதியவருக்கு, பாதி இரவில் எழுப்பி
(காலை 3 மணி) போர்வை அளிக்கும் தீபத்தின் நிர்வாகி திரு. உத்தம் சந்த் ஜெயின் அவர்கள்.



RNI : TNTAM/2010/35284 R.No.TN/CC(S)Dn/412/17-19

"REGISTERED" LICENSED TO POST WITHOUT PREPAYMENT
UNDER WPP NO.TN/PMG/(CCR) / WPP-290/2017-2019
Date of Publication : 20th of Every Month

## மார்கழி குளிரில் நடுங்கும் ரோடோர ஆதரவற்றவர்களுக்கு 350 போர்வைகளுடன் நள்ளிரவு முழுவதும் தொண்டு செய்த 26 சேவடிகள்.




To
Shri / Smt / Dr

POSTED ON
27 - 01 - 2017

If undelivered Please Return to :

# DEEPAM TRUST

(REDG. No. - 2035/07)

No. 30, Drowapathi Amman Koil Street (Next to Mosque), Velachery, Chennai - 600 042. Phone : 044 - 2244 2515
Cell : 94440 73635 | E-mail : trust.deepam@yahoo.co.in | Web : www.deepamtrust.in

Published by : M. Balakrishnan on behalf of Deepam Trust,
No.30, Drowpathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042 and
Printed by RK. Shekaar at Sree Offset Printer, No. 840, Anna Salai, Saidapet, Chennai - 600 015.
Editor : M. Balakrishnan